கள் நுழைய வழியில்லை. அப்படியும் எங்கேயாவது இது சம்பந் மாக புகார் வருகிறதென்றால் உடனடியாக அதிகாரிகள் சோதனையிட்டு, குற்றங்களைத் தடுத்து நடவடிக்கை மே கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

வணிக வரித் துறைக்கு ஆலோசனை குழுக்கள் :

*79—(*வினா எண் 14022)*—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித்துறைக்கு ஆலோசனை வழங்கிட வட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனை குழுக்கள் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்லும் போது 'இல்லை' என்று சொன்னார்கள், சில தொழில்கள் சில பகுதிகளில் மட்டும் நடைபெறுகின்றன. அப் படி இருக்கின்ற நேரத்தில் எங்கோ மாநில அளவில் ஓரிடத்தில் மட்டும் ஆலோசனைக்குழு இருந்து ஆலோசனை வழங்குவதால் அதனால் பயனில்லை. ஆங்காங்கே வட்ட அளவில் ஆலோ சனைக் குழுக்கள் இருந்தால் பொது மக்களிடமிருந்து, அரசியல் வாதிகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அதன் அடிப் படையில் வட்ட அளவில் சில சலுகைகளை, வசதிகளை பெற ஏதுவாக இருக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். மாநில அளவில் இருக்கின்ற ஆலோசனைக் குழு ஆண்டு ஒன்றுக்கு எத்தனை முறை கூடுகின்றது? இதுவரையில் என்ன பயன் தரும் ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20).

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, இன்றைய தினம் தமிழகத்திலே புதிதாக பிரிக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டம் தவிர மற்ற 19 மாவட் டங்களில் மாவட்ட அளவிலே உள்ள வணிகர்கள் குழு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் கூடி விவாதிக்கின்றார்கள். அங்கே கூடி விவாதிக்கின்ற பொருட்களின் மீது ஆட்சித் தலைவர்களே ஒரு முடிவெடுத்து வருகிறார்கள். அவர்களாலே முடியாத காரியங்கள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. **அரசு**

1987 நவம்பர் 12]

அவற்றின் மேல் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆக மாவட்டந்தோறும் நடைபெறுகிற இந்தக் குழுக்கள் உடனுக்குடன் கூடி அதற்கான முடிவுகளை மேற்கொண்டு வணிகர்களுக்கு ஏற்படுகிற இடர்ப்பாடுகளைப் பற்றியும், வணிகவரிச் சட்டங்கள் அமல்படுத்துகிற முறைகள் பற்றியும் விவாதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் மாநில அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழுவும் பலமுறை கூடி விவாதித்து இருக்கிறது. அந்தக் குழுவினுடைய உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்து விட்ட காரணத்தால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு விரைவில் அந்த மாநில அளவில் உள்ள குழு கூட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வர்த்தக சபை, வணிகர்கள் சங்கம், கூட்டுறவுத் துறை, உழவுத் தொழில் சார்புடைய அமைப்புக்கள் ஆகியவற்றின் சார்புடைய பிரதிநிதிகள் எல்லாம் இந்தக் குழுவிலே அங்கம் வகிக்கிறார்கள். மாநில அளவிலே உள்ள அந்தக் குழுவில் மக்கள் பிரதிநிதிகளும், வணிகர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்து, வணிகர்களுடைய நலம் குறித்து விவாதிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகள்

80—(*வினா எண் *14767*)—திரு. டி. எம். வெங்கடாசலம் : மற்றும் திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் உள்ள சோதனைச் சாவடிகள் எத்தனை ?

(ஆ) இதன் மூலம் *1986-87*–ல் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(அ)* தமிழ்நாட்டில் உள்ள மொத்த வணிக வரி சோதனைச் சாவடிகள் *65* *(அறுபத்தைந்து)*.

(ஆ) சோதனைச் சாவடிகளின் மூலம் *1986-87*ல் அரசுக்கு கிடைத்த நேரடி வருமானம் ரூ. *274.05* இலட்சங்கள்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மேலும் புதிதாக சோதனைச் சாவடிகளைத் துவக்குகிற எண்ணம் அரசுக்கு உள்ளதா ? சோதனைச் சாவடிகளில் அவர்களுக்குத் தகுந்த போக்குவரத்து வசதிகளைச் செய்து தர வேண்டும். வரிகள் கட்டாமல் சட்டத்திற்குப் புறம்பாக பொருட்களை எடுத்துச் செல்கிற வாகனங்களை வழிமறித்துப் பிடிக்கிற வகையில் ஜீப் போன்ற வாகன வசதிகளையும், பக்கத்தில் இருக்கின்ற காவல் நிலையங்களுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS